ஸ்ரீ அவதூத விஜயம்.

ஆசிரியர்கள் :-

திரு லோக-சீதாராம்

அ. வெ. ரெ. கிருஷ்ணசாமி

சுதந்திர பேரிகை பிரசுராலயம்.

ரெங்கநாதபுரம் :: துறையூர்.

உரிமை எமது] 1942 [விலை 4 அணா

சமர்ப்பணம்

" நீண்ட மௌனத்திற்குப் பிறகு, இன்று மீண்டும் தமிழன்னையின் திருமுன்னர் சுதந்திர பேரிகை இரண்டாவது தடவையாக முழங்குகிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த எங்கள் முதல் முயற்சி "சமஷ்டி" என்னும் சிறு அரசியல் நூல்.

இது எமது இரண்டாவது பிரசுரம். சேந்தமங்கலம் குகாலயத்தில் தனிமோனத்தவத்தில் ஆழ்ந்திருக்கும் ஸ்ரீ அவதூத ஸ்வாமிகளின் திவ்ய சரித்திர ரேகைகளை சுருக்கமாக விளக்கும் இச் சிறுநூலைத் தொடர்ந்து சிறந்த பிரசுரங்களை மலிவான விலையில் வெளியிடவேண்டுமென்பது எங்கள் ஆசை.

தமிழ் மக்கள் எங்கள் அன்புப்பணியை ஏற்று ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். அழகிய முன்னுரையின் மூலம் இச்சுடரை சிறப்பித்துள்ள ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி அவர்களுக்கு நாங்கள் கடப்பாடுடையோம்.

இங்ஙனம்,

பிரசுரகர்த்தர்கள்

ஓம் சக்தி.

1. மெய்ப் பொருள்.

ஓம்! ஓம்! என்று கடல் அலைகள் கரதாளம் போடுகின்றன. வானம் ஓம்! ஓம்! என்று சொல்லி உறுமுகிறது. விண்ணைக் குடைந்து, கடலைக் கலக்கி, கப்பலை நிர்த்தனம் செய்யவிட்டு வேடிக்கை பார்க்க. தலை போகிற வேகத்தில் சாடி வரும் சண்ட மாருதமும் ஓம் என்றே அலறுகிறது. மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றில் மிதந்து வரும் சுகந்தமும் ஓங்காரத்துடன் இழைந்தே வருகிறது. குன்றின் மேலிருந்து இறங்கிச் செல்லும் அருவியுங்கூட ஓமொலியில் ஒன்றுபட்டு ஜதிவரிசையுடன் தாளங் கொட்டித் தவழ்ந்து கலகலவென்று நடை பயில்கிறது. சோலைக் குயிலின் மோகன ராகமும், கிளியின் மழலையும் ஓமிசையின் ராக விஸ்தாரங்களே!

கோயில் மணியின் கண்டாநாதமும் சங்கொலியும், சேகண்டி சப்தமும், சந்தை இரைச்சலும், நாயின் குரைப்பும், பக்ஷி ஜாலங்களின் கிலு கிலு சப்தமும்

காற்றில் கலந்து அலை பரவும் போதும் ஓமொலிக் கின்றன. நீர், கனல், நிலம், வெளி, காற்று, மக்கள் இன்னும் அனைத்து ஜீவராசிகள் யாவும், நில்லாது சுழன்றோடும் அணுத்துகளும் அண்டங்களும் இந்த ஓங்கார சாம்ராஜ்யத்தின் ஆளுகையில் ஆனந்தத் தாண்டவம் ஆடுகின்றன.

அங்கு இங்கு என்ற பேதமின்றி எங்கும் பிரகாசமாய் நிலைபெற்று ஒளிரும் உண்மையே ஓங்காரம். இதுவே தாரகம். இந்த தாரக மந்திர ஆகூஷியே சர்வமும். அழியாப் பொருளைக் குறிப்பதே ஓம் என்னும் உச்சாடனம்.

இதனை உலகுக்கு உணர்த்தி உய்விக்க வல்ல பெரியோர் காலா காலங்களில் அவதாரம் செய்கின்றனர். அருள்மொழி பகன்று ஆட்கொள்ளுகின்றனர். அறிந்து ஆனந்தமடையும் ஆத்மாநுபூதிச் செல்வர்கள் உண்டு. போற்றுவோர் உண்டு. பின்பற்றுவோர் சிலர். பிழைத்தோர் மிகச் சிலர். தாங்கள் பிழைத்தது மன்றிப் பிறரைப் பிழைக்கவைத்தோர் மிகமிகச் சிலர்.

அத்தகைய மஹான்களில் பலரைப் பிரகிருதி பெற்றெடுத்தது புண்ணிய பாரதநாட்டில்தான். அவர்களுடைய மேதையால், தபோபலத்தால், ஆன்மவிளக்கத்தால் அறவுரையால் பாரதப்பண்பு மட்டுமின்றி மனித சமுதாயமே உயர்வை அடைந்தது.

இந்த மண்ணிற் பிறந்த புழுவும்கூட இதனுல் பெருமைகொள்ள முடியும். அத்யாத்மக் கலையின் ஆசார்ய பீடம் பாரதநாடு! ஞானம் என்பதன் உட்பொருள் பாரதபூமி!

பாரத ஹோம குண்டத்திலிருந்து அருட்கனல் ஏழுநாவிட்டுச் சுழன்றெழுந்து வானைத் தீண்டுகிறது. கால தேச வர்த்தமான பேதம் கடந்து சாஸ்வதமாக மணம் வீசி நிற்கும் வாடாமலர்களைப்பெற்ற அத்யாத்மச் சோலையே இந்தியா!

சர்வமத சமரஸ முழக்கம் செய்த விவேகானந்த ஜோதி எங்கு தோன்றியது? பொன்னையும், மண்ணையும் கங்கையில் கரைத்து மானிட மனமாசையும் கரைத்த பரமஹம்ஸரின் அவதார ஸ்தலம்;எது? ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமையை முரசறைந்த அருட்சோதிக் குயில் அகவியது எங்கே? மானேந்தும் ஈசன் உளம் நாண, ஆட்டின் மறியேந்தும் பெருங் கருணைப் புனித வள்ளல் அவதாரம் செய்த புண்ணிய பூமி எது? தியாகமும் கருணையும் உருவாய் வந்த காந்தியடிகளின் மாத்ருபூமி எது? இப்புனித பாரத நாடேயன்றோ!

உலகு தொடங்கிய நாள் முதலாக காலந்தோறும் பிரதேசம் தோறும் எத்துணை மாறுதல்கள் நிகழ்ந்து விட்டன! எத்தனை அதிசயங்கள் கண்டோம்! எத்தனை உத்பாதங்களைப் பார்த்தோம்! நாகரீகத்தால்

தலை நிமிர்ந்து நின்ற சாம்ராஜ்யங்களெல்லாம் எங்கே? மணிமகுடங்கள் எங்கே? சிங்காதனங்கள் எங்கே? தரை சாய்ந்துவிடவில்லையா? போன இடம் புல்முளைத்து விடவில்லையா? நாம் கண்டிருக்கவேகாலம் விழுங்கி விடவில்லையா? ஏன்! இப்பொழுதுதான் என்ன! இதோ! பூமண்டலம் முழுதும் குலுங்கி நடுங்கு கிறதே! ஆத்ம பலத்தை எள்ளி நகையாடி மிருக பலத்தை நம்பி நின்ற நாகரீகங்களும், சாம்ராஜ்யங் களும் ஒன்றோடொன்று உராய்ந்து ரணகளத்தில் நொடிப் பொழுதில் சாய்ந்து சரிந்து ரத்த ஆற்றில் கலந்து பிணச் சேற்றில் புதைந்துகொண்டிருக்கின் றனவே! ஆயினும் என்ன அதிசயம்! பாரத நாடு மட் டும் காலத்தை வென்று அன்று போலவே தன் கலை யும் நாகரீகமும் பண்பும் பலமும் இன்றும் நிலைத்து நிற்கக் காண்கிறோம். இதற்கு முன்னரும் எத்த னையோ பிரளயங்களிலெல்லாம் இந்தியா தப்பிப் பிழைத்திருக்கிறது. இனியும் பிழைத்திருக்கமுடியு மென்றும், பிறதேசங்களையும் பிழைக்கச்செய்துவிடும் சக்தி தனக்குண்டென்றும் இந்த இருபதாம் நூற் றாண்டில்கூட இந்தியா திடநம்பிக்கையும் தைர்யமும் கொண்டிருக்கிறது.

கலியின் கொடுமையை எதிர்த்துப் பாரத தேசம் மட்டும் மேன்மை நிலையை அடையச் சென்று கொண்டிருப்பது சாத்தியமாவது எதனால்? அந்த ரக சியம்தான் என்ன?

மாந்தர்க்கு நீதி ஒருவகை, மன்னவர்க்கு நீதி மற்றோர்வகை என்று மனம்போனபடிமயங்கி உழன்று விதம் விதமான வெள்ளைப் பெண்களுடன் வெளி நாடுகளிலும், அரண்மனை அந்தப்புரத்திலும் கூடிக் குதித்து அறமும் மறமும் அறவே அகன்று பேடிகளாகி தலைக்கேறிய தன்மயக்கத்தால் ஆழ்ந்திருக்கும் க்ஷத்திரியர்களால் இந்ததேசம் மேன்மையடைந்து விட்டதா? அன்றி, பகற் கொள்ளையடிக்கும் வணிகர்களால் இந்த நாடு அமரத்தன்மை கொண்டதா? அல்லது வேத மந்திரங்களின் பொருள் தெரியாமல் திரும்பத்திரும்ப உச்சரித்துக்கொண்டு அவற்றை நாணயவாரி செலவணியாக்க முயன்று நிற்கும் முப்புரி நூலோரின் மூடத்தனத்தால் இந்தபூமி இன்றும் அழியாமல் நிற்கிறதா? ஏனையோரின் இடம்பமா இந்நாட்டின் இணையற்ற பலமாக இலங்குகிறது? ஒருநாளுமில்லை.

இந்து ஸ்தானத்து யோகிகளின் தபோ வலிமையால்தான் இந்தத் தேசமட்டும் இன்னும் நிலைத்திருக்கிறது. கிருதயுகத்தை ஆக்ஞாபிக்கும் அண்ணல் இந்நாட்டிலன்றி வேறெங்கும் தோன்றமாட்டான். அச்சம், பேடிமை, அடிமைச்சிறுமதி யாவும் பொடிப் பொடியாகி, ஏற்றம், தாழ்வு, இன்மை, ஏதேஷ்டம் என்ற பேதங்கள் போகக் கடுந்தவம் புரியும் யோகீஸ்வரர்களன்றி வேறு யாரும் இந்தியாவைக் காத்துநிற்கும் சக்தி படைத்திருக்கவில்லை.

ரிஷிகளும், பக்தர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், மகாகவிகளும் இவ்வளவு பேர்தான் என்று கணக்கை நேர்செய்து வைத்துக்கொண்டு இனி அந்த வரிசையில் வைத்தெண்ணத்தக்க மஹான்கள் பிறக்க மாட்டார்களென்று மயங்கி நிற்பது அறிவீனம். ஏடுகள் கணக்கை நேர் செய்த பின்னரும், அத்தகைய அவதார புருஷர்கள் எண்ணிலர் இம்மண்ணில் தோன்றியிருக்கிறார்கள். சதாசிவப் பிரம்மேந்திராள், பரமஹம்ஸர், விவேகானந்தர், வள்ளலார், காந்தியடிகள், அரவிந்தர், ரமணர் முதலானவர்களெல்லாம் மஹனீயர்கள் பரம்பரையில் வந்தவர்கள் அல்லரோ?

இன்றும் நம்மிடையே மஹான்கள் இருக்கிறார்கள். இன்னும் தோன்றுவார்கள் என்பது உறுதி. கால சக்தி, தேவையானபோதெல்லாம் கண்ணொளி காட்டிக் கருணை புரியும்போது அவதார புருஷர்கள் தோன்றாமலிரார்.

நான் என்னும் ஆணவம் அகற்றி, இந்த ஞாலமெல்லாம் தானெனக்கொண்டு, பிறர் ஊனைச் சிதைத்தபோதிலும் தனதுள்ளம் அருளினால் நெகிழும் பரம தயாளுவும் மேதாவியுமானவர் ஞானி என்று போற்றப்படுவர். இந்த தன்மையே மனிதனை அமரநிலைக்கு உயர்த்துகிறது. இத்தன்மையைப் பிறவியிலே அமையப் பெற்றோரே அவதார புருஷர்கள்.

தமிழ் நாட்டுத் தவப்புதல்வனே, உன் கண்ணெதிரே உன் கன்னங்கள் அமுதூற அருட்குயில் ஒன்று அண்மையில் அகவுதல் கேள். சர்வசங்கபரித்யாகராய், அவதூதராய், சர்வஜீவதயாபார மூர்த்தியாய், சேந்தமங்கலம் தத்தகிரியில் குகாலயத்தில் எழுந்தருளியிருக்கும், சாந்த சொரூபராய் விளங்கும் **பரமஹம்ஸ பரிவ்ராஜக ஸ்ரீ ஸ்வயம் பிரகாச பிரம்மேந்திர சரஸ்வதிகள்** பாரத நாட்டின் யோகீஸ்வரர்களின் மரபில் வந்தவர்.

அவர்களின் திவ்ய தர்சன விசேஷத்தால் அறியாமை இருள் அகன்று, சச்சிதானந்தமாய் விளங்கும் அடிகளின் பேரருளுக்குப் பாத்திரமானவர் எண்ணிலர்.

முழுமதி மயிர்த்தாலன்ன முகந்திகழ் கருணை நோக்கு நம்மைக்கவர்கிறது. மூர்க்கரும் நேரிற்கண்டால் முகந்திடும் சாந்த வீச்சு நம்மை நெக்குருகச் செய்கிறது. இயற்கையோடியைந்தகுகாலயத்தில் வீற்றிருந்து அத்யாத்மச்சுடர்விடுக்கும் அடிகளைத் தரிசிப்பது பாக்யம்.

காலையில் வாசமலர்களுடன் புன்னகைத்து காக்கையும் குருவியும் கூடி விளையாட, புற்றரவும் விடமற்று அடிகளின் அன்புப் புல்லாங்குழலுக்கு உருகி நிற்கும் அற்புதத்தை என்னென்பது!

விண்மீன், மேகம், இரவி மதிபோன்று வெளிச்சத்தமின்றி ஜகத்திற்குழைக்கும் ஐயனின் திருவிளையாடல் அனந்தம். அவர்களாடிய சித்துகள் எண்ணில. அவர்களின் இகலோகயாத்திரையின் திரை விடப்படுவதன்முன் அடிகளின் தரிசனம் ஆன்ம லாபந்தரும். ஆட்டம் முடிவதற்குள் ஆனந்தத்தாண்டவத்தை கண்டு களிக்காத கண்வீணே. அடிகளின் அத்யாமச்சுடர் என்றென்றும் ஒளிவீசுமென்பது உறுதி. பேரானந்த நர்த்தனத்தின் ஜங்கார சப்தம் சாச்வதமாக நம்செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கும். அடிகளாரின் அத்யாத்ம வாழ்வின் எடவிழ்ந்து இன்பத்தேன் பிலிற்றி நிற்கிறது. தமிழ்மக்களே, வாருங்கள். தவசிரேஷ்டரை, யோக யோகீஸ்வரரைத் தரிசிப்போம். அவருடைய கல்யாண குணானுபவங்களைப் பஜிப்போம். அடிகளாரின் அறவுரை நமக்கு வழிகாட்டி பேரின்ப சித்திப் பெருவாழ்வை அருளட்டும். அடிகளின் பூர்வாசிரமம் முதலியவற்றை அறிவதன் மூலம் அந்த திவ்ய சரித்திர அடிச்சுவடு நம்மை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு, சாச்வதமான ஒளி உலகிற்கு அழைத்துச் செல்லட்டும்.

2. உதயம்.

இன்று சேந்தமங்கலம் தவச்சாலையில் வசந்த கீதமிசைக்கும் அருட்குயிலைப் பெற்றெடுத்த பெருமை நடு நாட்டிற்கே உரிமை. யோகபூமி என்று அறிஞர் புகழும் இந்தப்பிரதேசம் மஹான்கள் பலரைப் பெற்றெடுத்துப் புகழ் அடைந்திருக்கிறது.

இன்று பாழடைந்த பழங்கோட்டையின் சாயை போலக்காக்ஷியளிக்கும் கல்பட்டு என்னும் சிற்றூர் அடிகளாரின் அவதாரஸ்தலம்.

பித்தா! என்றழைத்து எதிர் வழக்காடிய அன்பனைத்தடுத்தாட்கொண்டபிரான் அர்ச்சா ரூபமாய் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவெண்ணெய் நல்லூருக்கு வடக்கே 5 மைல் தூரத்தில் உள்ளது கல்பட்டு. இடையே தென்பெண்ணை பிரவஹித்து ஓடுகிறது.

சுமார் 72 ஆண்டுகட்கு முன்பு இச்சிற்றூர் சகல சம்பத்தும் நிரம்பிவிளங்கியகாலம் பிரஜோத்பத்தி ஆண்டு கார்த்திகைத் திங்கள் பதினான்காம்நாள் அடிகளார் இங்கு திருவவதாரம் செய்தார்.

எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகிய அந்தணர் **ராமஸ்வாமி சாஸ்திரிகள்** இந்த அருட்

குழந்தையை மகவெனப் பெற்றெடுத்த பாக்கியவான். இவர் வடதேசத்து வடமர்மரபில்வந்த ஸ்ரீவத்ஸகோத்ரோத்பவர். மஹான் என்று உலகெல்லாம் போற்றும் உத்தமனைப் பத்து மாதம் சுமந்த புனிதவதி ஜானகியம்மையின் பாக்யமேபாக்யம்!

அடிகளின் பூர்வாசிரமநாமதேயம் கிருஷ்ணமூர்த்தி என்பது. கிருஷ்ணமூர்த்திக்கு மூன்று தமையன்மார் முறையே நாராயணஸாமி, குருஸாமி. நரசிம்மன், என்போர். தவிர இருதமக்கைகளும் உண்டு.

குழந்தை கிருஷ்ணமூர்த்தி 5 ஆண்டுகள்வரை தாய்மாமன் வீட்டில் வளர்ந்து வந்தார். அருட்குழவியின் ஆடல் பாடல் கண்டும் திருமுகப் பொலிவுகண்டும் யாவரும் போற்றிப் புகழ்ந்தனர்

3. பஞ்சம் சென்ற பாதை.

தாது வருஷப் பஞ்சமென்று உலகப்பிரசித்தி. இக்கொடிய பஞ்சம் சென்ற பாதையெல்லாம் பட்டுப்போயிற்று. காடெல்லாம் விறகானசெய்தி. பேய் மேய்ந்த காட்டைப்போல் நாடெங்கும் புகைந்து போயிற்று.

சாதாரணமாக சோழ நாட்டின் செழுமை நடு நாட்டிற்கில்லை. பஞ்சம் வந்துவிட்டால் சொல்லவேண்டுமோ? பஞ்சமோ! பஞ்சம்! கண்ட இடமெல்லாம் கானல்! பட்டினியால் மக்கள் பரதவித்தனர். ஊரை விட்டு கால்போன வாக்கில் போனவர் பலர். வழி நடுவில் அனாதைகளாக இறந்தவர் எத்தனையோபேர்! மனிதனை மனிதன் அடித்துத் தின்னும் கொடுமையான பஞ்சம். பஞ்சம் சென்றபாதையில் கல்பட்டும் அகப்படாமல்போகவில்லை. தீய்ந்துபோன ஊரை விட்டுக்கிளம்பிய கோஷ்டியில் நமது ராமஸ்வாமி சாஸ்திரிகளின் குடும்பமும் ஒன்று. செல்வர்களின் நிலையே சொல்லமுடியாத கோரமென்றால் வித்தையைநம்பி வாழ்ந்து வந்தோர் நிலைமை கற்பனைக்கும் இடந்தராதன்றோ!

நமது சாஸ்திரிகள் ஊரைவிட்டுப்பிரிந்து தங்கி நிற்க நிழல் நாடி, பருக நீர் நாடி, இருக்க நிலம் நாடிப் பாட்டைவழி செல்லவேண்டியதாயிற்று. வழியில் எத்

தனையோ இடையூறுகள்! சொல்லொணுத்துன்பங்கள்; அத்தனைக்கும் தப்பிப் பிழைத்து சோழ வளநாட்டை நாடி காவிரிக்கரையில் ஆடுதுரைவந்து சேர நான்கு ஆண்டுகள் பிடித்தன.

சோறுடைத்தென்னும் பெருமைவாய்ந்த சோழ வளநாடு வந்த விருந்தினரை எதிரேற்று ஆதரிக்கத் தயங்கவில்லை. ஆடுதுறையில் ஆதரவு கிடைக்கவே சாஸ்திரிகள் ஈசனை நம்பி இல்லறம் நடத்துவாராயினர்.

4. இளமையும் கல்வியும்

ஓதாதுணர்ந்த ஞானக் குழந்தையாம் நம் கிருஷ்ணமூர்த்திக்கு வித்யாப்யாசமும், உபநயனமும் முறையே நடைபெற்றன. கிருஷ்ணமூர்த்தி 7-ம் வகுப்பு வரை திருவிடைமருதூர் என்னும் திவ்ய ஸ்தலத்தில் பயின்றார். பிறகு கும்பகோணத்தில் பட்டஸ்ரீ நாராயண சாஸ்திரிகளின் ஆதரவும், ஆங்கிலக் கல்வியும் கிடைத்தது. வடமொழிப் பயிற்சியும் ஏற்பட்டது. 19-வது வயதில் திருவனந்தபுரத்தில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேர்வு பெற்றார். எல்லாம் சரிதான்.

ஆயினும், உலகுய்ய அவதரித்திருக்கும் உத்தமன் பள்ளிப்படிப்போடு அமைந்து விடுதல் இயலுமோ! நடராஜமூர்த்தியின் திவ்ய லீலாவிபூதி ஐயன் மனதைக் குழவிப்பருவத்தே கவர்ந்திருக்க அத்திவ்யானுபவம் வீண்போமோ! வெளித்தோற்றத்துக்கு லௌகீகக்கல்வியும் கற்ற போழ்தே அத்யாத்மக்கல்வியும் தானே மலர்ந்து வரலாயிற்று. அந்த ஆனந்த லாகிரியில் ஐயன் ஆழ்ந்து நின்றாரென்பதை அக்காலத்தில் யாரே அறிவர்? உள்ளே கனலும் ஆத்மீக தாகத்தை வீசிச் சுடர்விடச்செய்ய பட்டினத்தார் தாயுமானவர் அருள்வாக்குகள் துணை நின்றன. நாளடைவில் வளர்ந்து வந்த ஆத்மீக தாகம் இறைக் காதலாக மலர்ந்துவிட்டது. உள்ளம் இறையுணர்வில் ஒன்றி நின்று களிநடம் புரிந்தது.

5. உத்தியோகம்

ஆங்கிலப்படிப்பும் அறிவு விளக்கமும் அருட் கனிவும் நிரம்பி விளங்கும் நம் மூர்த்தியைத்தேடி உத்தியோகங்கள் வந்தன. வையகம் பயனுற வாழ்ந் திடவிரும்பிய கருணை வள்ளலான நம் மூர்த்தி ஆரம் பத்தில் ஆடுதுறை அடுத்த சிற்றூர்களில் பள்ளி ஆசி ரியராக அமர்ந்து அருட்பணி புரிந்து வந்தார். பின் னர் சேலத்தில் செட்டில்மெண்ட் இலாகாவில் ரூபாய் ஐம்பது சம்பளத்தில் உத்தியோகம் ஏற்றூர். பந்த நிவர்த்தியைத்தேடியலையும் மூர்த்தியின் ஹிருதயம் இந்த உத்தியோக பந்தங்களால் மாசுற்றே தேய்ந்தோ தளர்ந்தோ, போய்விடவில்லை. அதற்குப்பதில்நாளுக்கு நாள் உயிரில் அத்யாமக்கனலேறலாயிற்று.

குமாஸ்தாக்களுக்கு இயல்பானவேலைமிகுதியி னல் மூர்த்தியின் ஊனுடல் துன்புறும் காலமுமுண்டு எனினும்இதெல்லாம்வினைநீங்கும் வகையென்றுன்னி அநுபவிப்பார். ஆயினும் உத்யோக அலுவல்களை அல் லும் பகலும் நெடுநேரம் கவனித்தபின்னர் வழக்கம் போல் தனி மோனத்தவத்தில் ஆழ்ந்து இன்புறத் தவறுவதில்லை. உடனுழைத்த சக ஊழியர்கள் தோழ ரின் பக்குவ நிலைகண்டு போற்றியதுடன் தங்களால் இயன்றவரை வேலையைப் பகிர்ந்துகொள்ளவும் தலைப் பட்டனர்.

ஒருநாள் மூர்த்தி தனது காரியாலய தலைமை அதிகாரியுடன் வெளியூர் செல்லவேண்டிய தருணத்தில் தியான சமாதியில் ஆழ்ந்துவிட நேர்ந்தது. உரிய காலத்தில் சேவகன்வந்து எழுப்ப முயன்றான். அருகிருந்த உத்தியோகத்தோழர் அவனைத் தடுத்து மூர்த்திக்குப்பதில், தானே தலைமையதிகாரியுடன் சென்று கடன் புரிந்தார். நிஷ்டை கலைந்தெழுந்த மூர்த்தி நிகழ்ந்ததைக்கேட்டு திருவருளை வியந்து பேரானந்தமடைந்தார். இம்மாதிரி உதவிகள் தடையின்றிக்கிடைக்கவே மனம் பின்னும்பேறுருதி பூணலாயிற்று.

6. ஆசை வலை

எத்தனை நாளைக்குத்தான் இந்தப் பந்தத்தில் பிணிப்புண்டு கிடக்கிறதென்ற கவலை உண்டாகவே உத்தியோகத்தில் வெறுப்பும். விடுதலையார்வமும், அத்யாத்ம வானவெளியில் பறக்கும் அவாவும் கரை கடந்து வளரலாயிற்று.

அன்பனின் ஆத்மீக தாகம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாயிற்றோ அவ்வளவுக்கவ்வளவு பாசபந்தங்கள் ஆசைவலை விரித்து வீழ்த்தவழிதேடினவென்று கூறத்தக்கவாறு பிணிப்புகளும்சோதனைகளும் முளைத்தெழுந்தன.

நம் மூர்த்திக்கு சீக்கிரத்தில் சென்னைக்கு மாற்றலும் சம்பள உயர்வும் கிடைத்தன. உத்யோகத்தை விட விரும்பியபோது, உத்தியோககனமும் பொருள் கனமும் உயர்ந்துவிட்டது. பதவியும் பொருளும். வேண்டுவோரை வெறுப்பதும், வெறுப்போரை அணைவதும் அதிசயமே!

இளவயதும் அழகும் பெருமையும் பொருளும் பதவியும் பெற்ற அன்பனை மணமெனும் மாயவலையில் வீழ்த்த, பெற்றோரும் உற்றாரும் விரும்பினர். அன்பனுக்கு நலம் புரிவதாக அவர்கள் நினைத்தனரன்றி அவருடைய பக்குவ நிலையை அவர்கள் உணர்ந்தனரல்லர்.

பெண்களைப்பெற்றோர் வரன்தேடி மூர்த்தியைக்கண்டுபிடித்தனர் இவரைப் பெற்றோர் இணங்கி நின்றனர். தமையன்மார் சரிசொல்லி விட்டார்கள். உறவினர் மகிழ்ச்சி தெரிவித்தனர். ஆயினும் என்ன? பாதிகல்யாணம் நிச்சயமென்றால் அது சாத்யமாவதெப்படி?

மூர்த்தி சோதனையில் தளராது எதிர்த்து நின்றார். ஓர்புறம் பதவியும் பொருளும் உறவாட, மறுபுறம் பெண் ஆசை நாணிக்கோணி நர்த்தனமாடியது. அருட்கனலாம் ஐயனிடமோ மாயையின் ஜாலவேலைகள் பலிக்கும்! உண்மையறிந்த ஆன்மஞானிகள் மாயையின் படலங்களைக் கிழித்தெறிந்துவிடமாட்டார்களோ? பந்தங்களைக் கழற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்த அன்பனோ சோதனையில் தோற்பான்? தந்தையின் கட்டளையும், தாயின் கண்ணீரும், தமையன்மார் சினமும் உற்றார் ஏச்சும், ஊரார் பேச்சும் ஏதும் பயனிலாதாயிற்று.

7. பிணிப்பு

தோற்றேடிய மாயை வேறெரு விதத்தில் தன் வேலையைக் காட்டலாயிற்று. ஐயன் அறவழி நிற்பவ ரன்றே, அறத்தின் ஆணையால் ஐயனை மடக்கவும் முயன்றது.

தம்பியின் பக்குவமறியாத தமையன்மார் சீறினர். "இதற்கோ உன்னை வளர்த்து, செலவிட்டுக் கல்வி பயிற்றுவித்து ஆளாக்கிவைத்தோம் உன் விஷயமாகப் பட்டபாடெல்லாம் வியர்த்தமாகப்போயிற்றே. மூவாயிரம் ரூபாய்க்குமேல் உன்னுல் கரைந்துவிட்டது. எங்கள் சொற்படி கேட்டு நங்கை ஒருத்தியை மணந்து நாலுபேர் மெச்சக் குடித்தனம் செய்ய இஷ்டமில்லாவிட்டால் உனக்காகச் செலவான மூவாயிரத்தையும் கீழே வைத்துவிட்டு எக்கேடாவது கெட்டுப் போ" என்று உறுமினர். "ஓம்" என்றார் அடிகள். சோதனையில் வெற்றிபெற இந்த சுடுசொல் ஒரு ஊன்றுகோலாயிற்று. "நல்ல வேளை, அங்ஙனமே செய்வேன்! எப்பாடு பட்டேனும் உங்கள் பணத்தைப் பூராவும் கொடுத்து விடுதலை பெறுவேன். ஆனால் ஒரு நிபந்தனை, மணம் என்ற பேச்சுகூட இனி என் காதில் விழக்கூடாது" என்று தீர்மானமாகக் கூறிவிட்டார்.

கோபத்தில் கூறிய வார்த்தையென்று அலட்சியமாக இருந்துவிட்டனர் தமையன்மார். இனி இவ

ரை வழிப்படுத்த இயலாதென்று திட்டமாகத் தெரிந்து விடவே செயலற்றுத் திரும்பினர்.

மூர்த்தி நிபந்தனையை நிறைவேற்றுவதில் முனைந்து நின்றார். தமையன்மார் செயலற்றுத் திரும் பினரெனினும் ரூபாயைத் திரும்பப் பெறும் விஷயத் தை அவர்கள் கோபத்தில் கூறினரேயன்றி உண்மை யில் கூறினவரல்லர். ஆயினும் அருளன்பர் அதனையும் உண்மையாகவே எடுத்துக்கொண்டார்.

"ஆம்! அவர்கள் எனக்கு செலவிட்ட ரூபா யை திரும்பக்கொடுக்காமல் நான் விடுதலையடைவதற் கில்லை. அவர்கள் கடனைத் தீர்த்து என்னைத் தடுத் தாட்கொள்ள திருவருள் என்று கைகூடுமோ" என்று அல்லும் பகலும் அரும்பாடுபட்டு உழைத்துக் கடன் தீர்க்க பொருள் சேமிப்பதில் கவனம் செலுத்தலானார்.

8. விடுதலை

சில காலமாகவே துறவறத்தில் விருப்பம் மிகுதியிருந்தும் நிபந்தனையின் காரணமாக துறவற மேற்பதை ஒத்திவைக்கவேண்டியதாயிற்று. ஆத்மானு பூதியில் கலந்துநின்ற அன்பனின் உள்ளம் பொருள் சேர்க்கும் கவலையால் புகையலாயிற்று. கொஞ்சம் கொஞ்சமாக பாங்கியில் பணம் சேர்க்கப்பட்டு வந் தது. மீண்டும் சோதனை ஆரம்பமாயிற்று. சகோதரர் களுக்கிடையேயிருந்த நீண்ட மௌனம் கலைவதற்கு. பரனூர் முத்துசாமி சாஸ்திரிகள் காரணபூதராக முளைத்தார். தன் புதல்வியை கிருஷ்ணமூர்த்திக்கு விவாஹம் செய்து கொடுக்க விரும்பிய சாஸ்திரிகள் மூர்த்தியின் தந்தையை அடுத்தார். தந்தையின் ஆணை யை சிரமேற்றூங்கி குருசாமி கனபாடிகள் நிபந்தனை யை பெரிதாகக் கருதாது தம்பியிடம் மீண்டும் வந்து கட்டவிழ்த்தார். நான்கு நாட்களாக தமையனூர் காத் திருந்தார். தம்பியின் மௌனம் சகிக்கமுடியாததாயிற்று. கோபத்தால் கனன்று எழுந்த குருசாமி கனபாடிகள் குதித்தெழுந்து குடத்து நீரைத் தூக்கிவந்து தம்பி யின் தலையில் கவிழ்த்தார்.

மலை குலைந்தாலும் மனம் குலையாத மகானே இதற்கெல்லாம் மசிவார். புன்னகை மலர்ந்த புனித நோக்கோடு "கனபாடிகளே! நல்ல வேளை! தண்ணீர்

தெளித்து என்னை தனியே விட்டுவிட்டீர்கள். இன்றே விடுதலை பெற்றேன்! இன்றே புனித நாள்! நான் நம்பிய நடராஜன் நலமே புரிந்தான்! நிபந்தனையை மீறி விவாஹத்திற்கு மீண்டும் வற்புறுத்தியதால் முறிச்சீட்டு இத்தோடு முறிந்தது. உமக்கு பந்தப்பட்டிருந்த காலத்தில் உம் நிபந்தனைப்படி நான் சேர்த்த துகை இதோ பேங்கில் இருக்கிறது. பெற்றுக் கொள்ளும். இனி எனக்கு பந்தங்கள் எதுமில்லை" என்றுகூறி, அன்றே உத்தியோகத்தையும் உதறித் தள்ளி, பெருமகிழ்ச்சியடைந்தார். துறவு பூண்பதற்கு இறைவனின் சமிக்ஞையே இந்த நாடகம் போலும்!

---

9. சற்குரு யார்?

மானிட சிற்பியின் மகோன்னத மேதையில் உருப்பெற்றெழுந்த ஒருகல். மனிதசமுதாயம் தலைவணங்கும் மகாதேவனை தன்னுள் ஆவாஹனம் செய்துகொள்ளுகிறது. அதனுடன் பிறந்தவேறொரு கல் அதே சிற்பியின் மனோபீஷ்டத்தால் மாந்தர் மிதித்தேறும் மிதிகல்லாய் சமைகின்றது. தெய்வச்சிற்பியின் அலகிலாவிளையாட்டில் ஆவிர்ப்பவித்தெழும் அனைத்து ஜீவராசிகளும்கூட அவனிச்சைப்படியே அமையுமன்றோ! தன் அருட்விளக்கத்தை அகிலமெங்கும் அலை பரப்ப அருட் குழந்தைகளை அனுப்பும் அண்ணல் பிரகிருதியின் மாயா சம்பந்தத்திலிருந்து அவர்களைத்தடுத்தாட்கொள்ள உரியகாலத்தில் உளம் பற்றுதிருப்பனே!

அந்தகை அருட்குழந்தை கிருஷ்ணமூர்த்தி பந்தங்களிலிருந்து விடுதலைபெற்றார். உரியநாள் வந்துற்றது. சற்குரு தரிசனம் நாடி காசியம்பதியை நோக்கி நடந்தார்.

காசியம்பதியில் புண்ணிய கங்கையில் தீர்த்தமாடி விஸ்வேஸ்வர தரிசனம்செய்துகொண்டு சிலநாள் தாமதிக்க தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் தரிசனம் கைகூடியது. கல்லாலின்புடை அமர்ந்த கருணையங்கடல் இவரேயென்று கண்டுபோற்றி கண்ணீர் மல்கிக் கரைந்துருகி நின்ற அன்பனின் முகப்பொலிவுகண்டு

சுவாமிகள் அபயமளித்தாதரித்தார். மூன்று வருட காலத்திற்குள் சிவஞானபோதச் செல்வம்பெற்ற மூர்த்தி பின்னர் அங்கே ஒரு மௌன சுவாமிகளை யடுத்து சிலகாலம் இருந்தார். இதற்கிடையில் ஊனுடல் நோயுற நேர்ந்தது. இதையறிந்த அன்னை தந்தையர் ஓடோடியும்வந்து அருட்சுடராக விளங்கும் ஐயனை ஆடுதுரைக்கு வாவென அழைத்தனர். நமது அடிகள் தொண்ணூற்றுருவது நாள் வந்துசேர்வதாக உரைத்து அவர்களை அனுப்பினரேயன்றி இடம்விட்டு பெயர்ந்தாரில்லை. சில நாட்கள் கழித்து குருதேவரின் சன்னிதானத்தில் அடிபணிந்து "இப்போதே சன்னியாசம் தரவேண்டு"மென பிரார்த்தித்தார். அன்பனின் துறவுக்குரிய வைராக்கிய சித்தத்தை அறிந்தும் ஆசாரியர் "அன்னை தந்தை அனுமதியின்றி துறவு பூண்பது அழகல்ல, அனுமதிபெற முயல்க!" என அருளினர்.

காசிக்குப்போயும் கர்மம் விடவில்லை. பெற்ற மகன் பெருந்துறவு பூண யாரே சம்மதிப்பர்? எளிதில் அனுமதி கிடைக்காதென்று அன்பன் கலங்கி நின்றமை கண்டு ஆசாரியர் அருளிய ஆலோசனையின்படி, தந்தைக்குத்தன்நிலை உணர்த்தி அனுமதிகோரி கடிதம் வரைந்தார். பதிலும் ஆசார்யர்க்கே வந்தது. அனுமதியல்ல, ஆசாபங்கமே! கலங்கி நின்ற அன்பனுக்கு ஆசாரியர் பகன்ற அறவுரை இது:- "அன்ப! தந்தையின் அனுமதியின்றி சந்நியாசம் அளிப்பது முறையல்ல. அவர் விருப்பப்படியே தக்ஷிணம்செல்! தகுந்த சமயத்

தில் இறைவன் உன்னை தடுத்தாட்கொள்வான். கவலையைவிடு. உடல் அளித்த உத்தமர்க்கு உறுகடன் புரியாது உய்வதற்கில்லை. மகனே, உன்மனோபீஷ்டம் நிறைவேறுவதாக."

வேறுவழியின்றி விரைந்தார் தக்ஷிணம்நோக்கி. காசியில்வாக்களித்தபடி 96வது நாள் ஊர் எல்லை மிதித்தது ஆச்சர்யம்! விடுதலை விழையும் ஆன்ம வீரனுக்கு வருவதற்குமுன்னே வழிதிறந்திருந்தது. வீட்டிற்குள் நுழையவேண்டிய சந்தர்ப்பமேயில்லை. மூர்த்தியின் தந்தையார் அன்று காலையிலேயே அரனடி சேர்ந்திருந்தார். இச்சேதிகேட்டு நேரே மயானத்திற்கு விரைந்து சென்று காத்திருந்தார். கல்லென்று சுற்றத்தார் கணங்கொண்டலறி, பிணங்கொண்டு காடுற்றனர் அடிகள் மட்டும் முகமலர்ச்சியோடு வீற்றிருந்தார். ஸ்வாமிகள் பிரேத தகனத்தில் பங்கெடுத்துக்கொள்ளவில்லை. பலர் இவரை வெறுத்தனர். எனினும் அடிகளின் உண்மை நிலையை அறிந்த உத்தமர் சிலர் போற்றவும் செய்தனர்.

கிரியைகள் யாவும் முடிந்த பின்னர் அன்னையைக்கிட்டி அனுமதி வேண்டினர். முயற்சி வீணாயிற்று. சில நாட்களில் தமையன்மார். தாயுடன் புறப்பட்டு ஜீவனோபாயம் நாடி புதுக்கோட்டையையடுத்த கானம்பேட்டை சென்று வசித்தனர். அவர்களைவிடாது தொடர்ந்து சென்ற அடிகள் மேலும் முற்றுகையிடலா

யினர். தாயும், தமையனும் காணப் பிச்சையேற்று உண்டு எஞ்சியதை காக பலியாக அளித்து காலம் நோக்கிக் காத்திருந்தார்.

அடிகளின் ஆத்மானுபூதியை அருகிருந்தோர் கண்டு அதிசயித்தனர். அக்காலத்தில் அடிகளின் அருந் துணைவர் காக்கையும் குருவியும் கல்லும் மண்ணும் கக னமுமேயாம்.

நாட்கள் மாதங்கள் நடந்து ஓராண்டுமாயிற்று ஆயினும் அடிகள் தன் முற்றுகையைத் தளர்த்தினு ரில்லை. முன்னொருசமயம் நிபந்தனை கூறி நிலை குலைந்த தமையன் இத்தடவைமட்டும் அகப்படா மல் தப்பித்துக்கொள்ளமுடியுமோ? சன்யாசம் தரவல்ல சற்குருவைத்தேடிவந்த பின்னர் பார்ப்போம் என்று வாயசைத்துவிட்டார். அவ்வளவுதான், அடிகளுக்கு அங்கென்ன வேலை? வாழ்விக்கவரும் வள்ளல் யார், அவர் எங்கே, அவரைக்காண்பதெங்ஙனம்? இதுவே கேள்வி? இம்முயற்சியில் ஈடுபட்டலைந்தார்.

10 சற்குரு தரிசனம்

தற்செயலாக திறவுகோல் கிடைத்து விட்டது. காற்றுவாக்கில் யாரோ பேசிக்கொண்டு சென்ற வார்த்தை அசரீரியாக அமைந்தது. மதுரையில் அருளானந்தவெள்ளம் பொழியும் சப் ஜட்ஜ் ஸ்வாமிகளின் பெயர் காற்றிலே மிதந்து வந்தது. காதும் கருத்தும் குளிர்ந்தது. கால் ஓட்டம் பயின்றது. நேரே மதுரையம்பதி அடைந்தார். சற்குருவைத் தேடியலைந்த சீடனுக்குத் தங்க நிழல் கிடைத்துவிட்டது. சற்குரு தரிசன விசேஷத்தால் அடிகளின் உள்ளம் உருகியது. கண்ணீர் பெருகக் காலில் வீழ்ந்து கரைந்தழுதார். கண்ணெடுத்துப் பார்த்த கருணை வள்ளலான சற்குரு நாதன் அன்பனை ஏற்று அகமகிழ்ந்தார். சப் ஜட்ஜ் ஸ்வாமிகளென்றும் சதாசிவேந்திராளென்றும்விளங்கிய இவர்களிடம் சில காலம் குருகுல வாசம் செய்து பல அரியஉண்மைகளைக் கற்றுத்தெளிந்தார் நமது அடிகள்

விகாரி-௵ ஆனி-மீ பௌர்ணமியன்று அடிகள் குருநாதனைப் பணிந்து. தந்தையின் வியோகத்தையும். அன்னை அநுமதியளிக்க மனம் கொண்டதையும் விண்ணப்பித்து தனக்குத் துறவும். அவதூதமும் அருளப் பிரார்த்தித்தார்.

குருநாதர் சீடனாகச் சரணடைந்த அன்பனின் உள்ள நெகிழ்வை உவந்து உபதேசம் அருளியதுடன்

உடனே அன்னையைப் பணிந்து ஒரு முகூர்த்த காலத் திற்குப்பின் அங்கேயே அவதூதமும் மோனமும் மேற் கொள்ளப் பணித்தார்.

---

11. சர்வ சங்க பரித்யாகம்.

ஆன்மீக தாகம் தணிய இன்பவாரிதி சொரிந்த ஆசார்யனின்கருணையைஎண்ணிஅகமகிழ்ந்து ஆனந்ததாண்டவமாடிப் போற்றிப்பணிந்து. கானம் பேட்டையை நோக்கி விரைந்தார். அங்கு சென்று அன்னையை வலம்வந்து பணிந்து ஒரு முகூர்த்தகாலம் தாயுடனும் தமையன்மாருடனும் அளவளாவியிருந்து பிறகு அங்கேயே நெகிழ்ந்த ஆடையைக் களைந்து அவதூதமும் மோனமுமடைந்தார். மூன்று தினங்கள் அவ்விடம் கழித்து உத்திரமுகமாகச்சென்று அருணாசலேஸ்வரன் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள திருவண்ணமலையை அடைந்தார்.

அடிகளுக்கு இங்கு ஸ்ரீ ரமண மஹார்ஷிகளின் பரிச்யம் ஏற்பட்டது. அங்கு சிலமாதங்கள் தியானத்தில் அமர்ந் திருக்க. அடிகளின் பூர்வாசிரம பந்துக்களும் நண்பர் களும் அடிக்கடிவந்துபோவதாயினர். அதை அகற்ற விரும்பி தவத்திற்கேற்ற இடம்தேடி, கோல்லிமலை நாடிப்புறப்பட்டார்.

---

12. சேந்தமங்கலம் சேர்தல்

காடும் மலையும் கடந்து செல்லும் அடிகள் சேலம் வந்துற்றார். திகம்பரராகசெல்லும்ஸ்வாமிகளைக் கண்டு இவன்யாரோ பயித்தியக்காரன் என்று உலகம் பரிகசித்து எள்ளி நகையாடியது. கல்லைவிட்டெறிந்து காயம் உண்டாக்கினர் பலர். தேக மானுபிமானம் விட்டு அவதூதாசிரமம் கொண்ட அடிகள் அதனைப் பொருட்படுத்தாது சரீரத்தை மறந்த நிலையினராய் திரிந்துகொண்டிருந்தகாலை, "ஆடையின்றி அலைவது அநீத"மென்று போலீஸார் கைது செய்தனர். நீதி ஸ்தலத்தில் விசாரணையின்போது கிருஷ்ணசாமி ஐயர் என்ற வழக்கறிஞர் அடிகளின் நிலையையும், ஹிந்து மதத்தில் அவதூதாசிரமத்தின் தன்மையையும் விளக்கிக்கூற. விடுதலை கிடைத்தது. வழக்கறிஞர் கிருஷ்ண சாமியால் போற்றப்பட்டு அவர் இல்லத்திலேயே அடிகள் சில நாள் கழித்தார்.

மீண்டும் ஸ்வாமிகள் தனது யாத்திரையை தொடங்கி சேந்தமங்கலம் வந்த காலத்தில் அறிஞர் பலர் கண்டு வணங்கி நின்றனர். ஸ்வாமிகள் அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அங்கேயே தாமதிக்கலானர்.

---

13 சேந்தமங்கலத்தில்

இன்ப துன்பம் கடந்து பேதாபேதமகற்றி ஆனந்த வாரியில் திளைத்து அந்தர்முகமாக அருளரசு வீற்றிருந்த அண்ணலை அன்பர்கள் ஒருபுறம் போற்றித் துதித்தபோது வன்பர்களின் பங்கு மட்டும் சொத்தையாகிவிடுமோ என்ன? அவர்களும் தங்கள் பங்கிற்கு ஏராளமான ஹிம்சைகளைச் செய்து தங்கள் உரிமையை நிலைநாட்டத் தவறவில்லை. தொன்று தொட்டு இயேசு, முகம்மது, சங்கரர், ராமாநுஜர் முதலிய மஹான்களை எள்ளி நகையாடி அவமதித்த உலகம் அடிகளாரைமட்டும் விட்டுவைக்குமோ!

சேந்தமங்கலத்தில் முகம்மதியர் தெரு ஒன்றும் உண்டு. அக்காலத்தில் ஹிந்து முஸ்லீம் பிணக்குகளும் அவ்வப்போது நிகழும். ஸ்வாமிகள் அவதூதராய் திரிவதன் காரணமாக அவருக்கு ஏதேனும் தீங்கு நேருமோ என்று அன்பர்கள் அஞ்சினர். அவர்கள் அஞ்சியபடி கோர சம்பவம் நடந்தேவிட்டது. சிவாலயம் நோக்கிச் சென்ற அடிகள் முகம்மதியர் தெருவழியே போய்க்கொண்டிருந்தார். முகம்மதியர் கண்டு கொதித்தெழுந்தனர். "என்ன அகம்பாவம்! ஆடையின்றி. கோஷாக்கள் வசிக்கும் தெருவூடுசெல்ல அவ்வளவாயிற்று?" என்று கூறி நையப் புடைத்தனர். அண்மையிலிருந்த அன்பர்கள் அரவம் கேட்டு ஓடி வந்து அடிகளை எடுத்துச் சென்று காப்பாற்றினார்கள்.

அவர்கள் எவ்வளவு வேண்டியும் ஐயன் மீண்டும் அஞ்சாமல் அத்தெரு வழியே சிவாலயம் சென்றார். இதன் காரணமாக சமூகப் பிணக்கு மீண்டும் புகைந்தது.

ஒரு நாள் அடிகள் ஊருக்கு வெளியே ஆல விருக்ஷத்தின் அடியில் அமர்ந்திருந்தகாலை. துஷ்டர்கள் கல்லை விட்டெறிந்து தொல்லை விளைவித்தனர். ஒரு கல் அடிகளின் தொண்டையில் பட்டு காயம் உண்டாக்கியது.

அத்தனை அவமரியாதைகளையும் இடையூறுகளையும் புன்முறுவலுடன் சகித்துக்கொண்டிருந்தாரேயன்றி அந்தவூரைவிட்டு அகலவில்லை.. அவர் ஏன் அகலவேண்டும்: நாமார்க்குங்குடியல்லோம் நமனை யஞ்சோம் என்ற வீரசுதந்திர சங்கநாதம் புரிந்த அருள் அன்பர் பரம்பரையில் அவதரித்தோர் அஞ்ச வேண்டியதென்ன இருக்கிறது?

நாளடைவில் அன்பர்கள் கூட்டம் அதிகரித்தது. ஆகவே சலனமற்ற ஏகாந்த நிலை நாடி அடிகள் ஊருக்கு வடக்கே இரண்டுகல் தூரத்திற்கப்பாலுள்ள கொல்லி மலை சென்று மனம் போன போக்கில் அலைந்துகொண்டிருந்தார்.

---

14. குகாலயம்

சேந்தமங்கலத்தைச் சுற்றி குன்று போன்ற இடங்கள் உண்டு. சாதுக்கள் அடிக்கடி தங்கும் குன்றிற்கு சந்யாசிக்காடு என்று பெயர். தேன்காடு, நயனமலைக் காடு என்று வேறு இரண்டு காடுகளும் உண்டு. நயினமலைக் காடு அடிவாரம் பிரசித்தியான சந்தை கூடும் இடம். பிரசித்திபெற்ற விஷ்ணு ஆலயமும் உண்டு.

குகையிலிருந்து கிளம்பிய சிங்கம்போல் அடிகள் தனிக்காட்டில் திரிந்துகொண்டிருந்தார். மெய்யன்பர்கள் பலர் அடிக்கடி வந்து தரிசித்து செல்வர். அடிகளின் பெருமையைக் கேள்வியுற்றிருந்தவரும், ஹைகோர்ட் நீதிபதியாக இருந்து பென்ஷன் பெறுபவருமான வைசிய குல திலகர் ஸ்ரீ சுந்தரம் செட்டியாரவர்கள் அடிகளிடம் அடிக்கடி வந்து தரிசனம் செய்து போவார். அன்பர்கள் அடிகளாரை சந்யாசிக் காடில் தங்கியிருக்கும்படி எவ்வளவோ வேண்டிக் கொண்டும் ஐயன் தன்னிச்சைப்படி அலைந்துகொண்டிருந்தார்.

மூவாசை அறுத்த முனிபுங்கவனுக்கு பெண்ணின் பெயரால் பெரும்பழி ஒன்றும் வந்து சேர்ந்தது. மலைவாசியான ஒரு மங்கை மாயமாய்ப்போனளாம். தேடியலைந்த மலையாளிகள் அடிகளின் அவதூத

நிலையைக்கண்டு சந்தேகித்து அவதூறு பேசி அடித்து அவமதித்தனர். அடிகள் மேலெல்லாம் ரத்தம் பீறிட்டடிக்க அமைதியோடிருந்தார். தற்செயலாய் அங்கு வந்த அதிகாரி ஒருவர் அறிவிலிகளை விரட்டி அடிகளை அழைத்துச் சென்று காயங்களை ஆற்றி உபசரித்தனுப்பினர்.

பின்னர் ஸ்வாமிகள் நிர்விகற்பசமாதியடையத் தீர்மானித்து ஒரு குகையில் அமருங்காலையில் அன்பர்கள்தடுத்து அழகாய்நிருமித்த ஒரு குகையில் அமர்த்தி வேண்டிய ஏற்பாடுகள் செய்வித்தனர்! அடிகள் அங்கு தங்கிய பின்னர் முன்பக்கம் கட்டிடம்கட்டி நாளடைவில்ஆசிரமம் விஸ்தாரமடைந்தது. இதுவே கந்தாஸ்ரமம் அடிகள் அங்கு தியான சமாதியில் ஆழ்ந்திருந்தார்.

அடிகள் அன்று நிஷ்டை கூடுமுன் தம்மையடுத்த அன்பர் ஒருவர்க்கு ஆணையிட்டபடி கதவு பூட்டப்பட்டது. கபாடம் திறக்கக் கட்டளை எதிர்பார்த்து அன்பர் காத்திருந்தார்.

நாட்கள் நகர ஆரம்பிக்கவே ஸ்வாமிகள் பூட்டப்பட்டிருந்த செய்தியும் வெளியே பரவ ஆரம்பித்தது இதனையறிந்த சேலம் கலெக்டர் குகையில் மனிதனைப்பூட்டுவது சட்ட விரோதமென்றும் உடனே திறக்கும்படியும் உத்தரவிட்டார். அன்பர் அசையவில்லை. அடிகளின் உத்தரவின்றி ஆலயம் திறப்பதற்

கில்லையென்று மறுத்துவிட்டார். அரசாங்க அதிகாரிகள் தங்கள் இஷ்டப்படி கதவை உடைத்துப்பார்க்க அடிகள் மரக்கட்டைபோல நீட்டிக்கிடந்ததைக்கண்டு உயிர்போயிருக்கவேண்டுமென்று தீர்மானித்து ஸ்வாமிகளை வெளியே இழுத்தெறிந்தனர். அவ்வளவில் அடிகள் பகிர்முஹப்பட்டு கண்விழித்தார். அதிகாரிகள் அஞ்சி ஐயன் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். இப்பொழுது அடிகளின் உடல் வெறும் எலும்புக்கூடாயிருந்தது. அடிகள் குகைபூட்டப்பட்டிருக்கும்போதே காடுகளில் சஞ்சாரம்செய்து மீண்டும் கதவு திறக்கும் காலத்தில் உள்ளே காணப்படுவராம்.

பிரம்மானந்த நிஷ்டானுபூதியில் கலந்திருந்த சமயம் ஒன்றில் கிருஷ்ண சர்ப்பம் அடிகளைச்சுற்றி மண்டலமிட்டிருப்பதைக்கண்ட அடியார்கள் அலறிப் புடைத்து நிற்க, அடிகள் கண்விழித்துப் புன்னகை பூத்தனராம். பின்னர் அடிகள் கூறியபிறகு அரவம் ஏகியதென்பர்.

நெஞ்சில் ஆத்மசமத்துவம்பூத்துக் கனிந்து குலுங்கி நிற்கும் அருள் அன்பர்களிடம் எதுதான் என்னசெய்யும்! உயிரெல்லாம் ஒன்றெனக்காணும் உத்தமர்க்கென்ன பயம்!

அடிக்கடி குகையைவிட்டு வெளியேறி சில காலம் சஞ்சரிப்பதும் மீண்டும் குகைக்கு வருவதும் உண்டு.

---

15. பூப்பிரதக்ஷணம்

பின்னர் அடிகள் பூப்பிரதக்ஷணம் செய்யக் கருதி கால் நடையாக ஆசேது ஹிமாசல பர்யந்தம் யாத்திரை புரிந்தனர். அவதூதாச்ரமியாகிய அடிகளுக்கு மூட ஜனங்களாலும், மதவாதிகளாலும் மூட வைதீகர்களாலும் இடையே ஏற்பட்ட இடுக்கண்கள் அனந்தம். இன்னல் விளைத்தோர் பெற்ற பலனும் பயங்கரமானது. அந்த விநோத திருவிளையாடல்கள் அடிகளின் ஆத்ம பலத்தை விளக்குகின்றன.

பலவிதமான அற்புத லீலைகளைப்புரிந்து கால் போனபடி அலைந்துகொண்டிருந்த அடிகள் பதினேழு வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் சேந்தமங்கலம் அடைந்தார்.

அடிகள் பத்ரிநாராயணத்தில் தங்கிவிட நினைத்தார். பத்ரிநாராயணத்தில் ஒருநாள் ஸ்ரீ தத்தாத்ரேய குகைக்கருகில் தியான சமாதியில் ஆழ்ந்திருந்த அடிகளின் கனவிலே ஸ்ரீ தத்தாத்ரேயமூர்த்தி தோன்றி தன் ஆலயப்பிரதிஷ்டை தக்ஷிண தேசத்தில் செய்விக்கக் கட்டளையிட்டனராம். ஆகவே அடிகள் திரும்பிவிட்டார்.

16. தத்தகிரி

திரும்பிவந்தபின்னர் ஸ்வாமிகள் ஸ்ரீ தத்தாத்ரேய ஆலய பிரதிஷ்டையில் சிந்தை செலுத்துவாராயினர். சர்வசங்க பரித்யாகராய் விளங்கும் அடிகளார் ஈசுவர சங்கற்பத்துக்கு சாக்ஷிமாத்திரமாகவிருக்க ஆலயப் பிரதிஷ்டைக்குவேண்டிய வேலைகளை அன்பர்கள் கவனித்தனர். விரைவில் சன்யாசிக்குன்றின் உச்சியில் தத்தாத்ரேய ஆலயம் பிரதிஷ்டையாகியது. இதுவே தத்தகிரி என வழங்குகிறது.

தத்தாத்ரேய மூர்த்தி, பிரம்ம விஷ்ணு ருத்ர ஸ்வரூபராகையினுலே மதத்துவேஷத்தைப் போக்கவும் குருதேவராலயமின்றியிருந்த குறையை நிவர்த்திக்கவும் அக்காலத்தில் இந்தப் பிரதிஷ்டை இன்றியமையாததாயிற்றுபோலும்! அவதூதரான நமது அடிகள் அவதூத பாரம்பர்யத்தின் ஆதிகுரு மூர்த்தியான தத்தாத்ரேயருக்கு ஆலயம் நிருமிக்கக் காரணமாயிருந்தது பொருத்தமும் ஏற்றமுமுடையதன்றோ!

17. அன்பர் குழாம்

பல இடங்களிலிருந்தும் அடிகளின் பெருமையைக் கேள்வியுற்ற அன்பர் பலர்வந்து தரிசித்தனர். சிலர் அடிகளை அடுத்து சீடராகும் பேறுபெற்றனர். சிலசமயம் அடிகள் யாருக்கும் தெரியாமல் குகை விட்டு சென்றுவிடும்போதெல்லாம் **சங்கரானந்தர்** என்னும் மெய்யன்பர் அடிகள் கடிந்துகொள்வதையும் பொருட்படுத்தாது தேடிக் கண்டுபிடித்து பணிவிடை செய்தார். நாளடைவில் சங்கரானந்தர் அடிகளின் பரிபூர்ண கிருபைக்கும் பாத்திரரானார். அடிகளால் துறவு அருளப்பெற்று இன்றும் அடிகளின் திருமுன்னர் பரமானந்த சீடராகவும் ஆசிரம நிர்வாகியாகவும் பணியாற்றி வருகிறார். ஆச்சிரமத்துக்கு வரும் அன்பர்களைக்கண்ணெனக்காத்து உபசரித்து எல்லோரையும் கவரும் கம்பீரமூர்த்தி நமது சங்கரானந்தர்.

அடிகளைக் காசியம்பதியில் தரிசித்த பின்னர் சில காலம் சென்றபின் அடிகளிடம் ஆசிரமம்பெற்ற நிஜானந்தர் என்ற அன்பர் ஒருவரும் உண்டு. இவர் ஸ்வாமிகளின்பேரில் சாஸ்திர ரூபமாகவும் ஸ்தோத்திர ரூபமாகவும் அவதூத வெண்பாமாலை இரட்டை மணி மாலை நவமணிமாலை, சில சம்ஸ்கிருத ஸ்லோகங்கள் இயற்றியிருக்கிறார்.

அடிகளார் திருவரங்கத்தில் இருந்த காலத்தில் இவர்களிடம் அடிமை பூண்ட ஸ்ரீ தியாகராஜ பிள்ளை என்ற சிவஞானச்செல்வரும் குறிப்பிடத்தக்கவரே. இவரே பின்னர் ரிஷிகேசத்தில் மஹாசமாதியடைந்தவர்.

துரியானந்தர் என்று பிரபலமாக விளங்கும் அன்பரும், பூர்வாசிரமத்தில் சிறுவயதில் ஆங்கில, வடமொழி ஞானம் பெற்று முடிவில் துறவு மார்க்கத்தில் விருப்புடையவராய் நமது அடிகளை ஆச்ரயித்து கடும் சோதனைக்குப் பின்னர் அடிகள் அருள ஆசிரமம் பெற்றார். சீடர்களோடு அடிகள் அளவளாவியிருந்தகாலத்தில் அத்யாத்மக்கலை பழுத்துக் கனிந்த உபதேசக் கனிகள் பல உதிர்வதுண்டு. அவற்றை விரிவான நூல்களில் வெளியிட்டிருக்கின்றனர். வெளிவராத ஏனையவற்றைக் காலசக்திவெளியாக்கும். தவிர சிவானந்தர். கைவல்யானந்தர் என்பவர்களும் அன்பர்பர்கள் குழாத்தில் பிரதானமானவர்.

அதோ! சுற்றிலும் சோலைப் பசுமை. நடுவிலே அமைந்துள்ள சுடர்மனை சொக்கழகாகத் திகழ்கிறது. பக்ஷி ஜாலங்களும் மிருக ஜாதிகளும். பிரகிருதியின் சௌந்தர்ய சோபையை பன்மடங்காக்குகின்றன. நீர் நிறைந்து விளங்கும் ஏரியின் நிலை இந்த யோக யோகீஸ்வரரின் சலனமற்ற சாஸ்வத நிலையின் பகைப்புலன்போலும் தோன்றுகிறது. இத்தகைய

சுற்றுணர்ச்சியுடன் நிஷ்டை கூடி நிற்கும் அடிகளின் திருமுன் இன்று மாந்தர் யாரும் வந்து வணங்கி நிற்க குாலயச் சோலையிலிருந்து அத்யாம கீதம் முழங்குகிறது. அடிகளின் சந்நிதான தரிசன விசேஷத்தால் ஊனும் உயிரும் சிலிர்க்கிறது. உள்ளத்தில் பேரானந்த வெள்ளம் பெருகுகிறது. அங்கு வீசும் தென்றலில் பிரம்ம ஞானத் திருமணம் கமழ்கிறது. இத்தகைய தவசிரேஷ்டர்கள் இந்நாட்டிலன்றி வேறெங்கு அவதரிக்கமுடியும்?



ஸ்ரீ தத்தாத்ரேய மூர்த்தி

தத்தாத்ரேய பிரபாவம்.

மஹா ஞானியும், ஸப்தரிஷிகளில் ஒருவருமான அத்திரி மஹாரிஷியானவர் அனஸூயை என னும் பதிவிரதா சிரோன்மணியோடு இல்லற ஞானியாய் வாழ்ந்து வந்தார்.

நாரதர் ஒருநாள் இரும்பினால் செய்த கடலை யை எடுத்துக்கொண்டுபோய் மூவுலகங்களுக்கும் சென்று லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி முதலானவர் களிடம் அந்தக் கடலையை வறுத்துக் கொடுக்கும்படிக் கேட்டார். அவர்கள் இரும்பை வறுக்கச் சொன்னதற் காக நாரதரைப் பரிஹாசம் செய்தனர்.

உடனே நாரதர் அனஸூயா தேவியிடம் வந்து இரும்புக் கடலையைக் கொடுத்து தன் விருப்பத்தை வெளியிட்டார். அனஸூயா தன் பாதிவிர்த்ய சக்தியி னால் கடலையை வறுத்துக்கொடுக்க அதை நாரதர் தின்றுகொண்டே மீண்டும் மூவுலகங்களுக்கும் சென்று அனுஸூயையின் சக்தியை மெச்சிப்பேசினார்.

இதனால் அவர்கள் தங்கள் தங்கள் கணவன் மாரைத் தூண்டி அனஸூயையின் கற்பை சோதிக் கும்படி செய்தனர். மும்மூர்த்திகளும் அதன்படியே பூலோகம் வந்து அனஸூயா தேவியிடம் நிர்வாண பிக்ஷை யாசித்தனர். உடனே அனுஸூயா நிர்வாண

முன்னுரை

விளக்கைப் பார்க்க வெளிச்சம் தேவையில்லை. அதேபோல பெரியோர்களின் பெரியோரான, வர்ணாசிரமத்தைக் கடந்த சேந்தமங்கலம் ஸ்ரீ அவதூத ஸ்வாமிகளின் சரித்திரத்தைக் கூறும் இப்புத்தகத்துக்கு முகவுரை தேவையா என்பதே பொருத்தமான கேள்வி. ஆனால் இது விளம்பர யுகம். போலிச் சரக்குகள் அசலுடன் மூர்க்கமாகப் போராடும் இக்காலத்தில் உண்மைச் சரக்கின் இருப்பிடத்தை பலரறியக் காட்டவேண்டியது கடமையாகிறது.

ஸ்ரீ அவதூதரை தரிசித்தவர்கள் அவர்கள் நிலையின் உயர்வை ஓரளவுக்கு ஊகிக்கக்கூடும். உடனே அவர்கள் எவ்விதத்தில் இவ்வுன்னதமான நிலையை அடைந்தார் என்றறிய மனம் துடிக்கும். அத்துடிப்புக்குச் சிறிய சமாதானமாக ஸ்ரீ அவதூதரின் ஜீவிய சரித்திரம் இங்கு தரப்பட்டிருக்கிறது. காணற்கரிய பொக்கிஷத்தைக்கண்ட குதூகலத்துடனும், நெகிழ்ச்சியுடனும், தூங்கும் உணர்ச்சியைத் தட்டி யெழுப்பும் முறையிலும் ஆசிரியர்களால் இனிமையாக இச் சரித்திரம் எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் உதவியால் நமது நாட்டினர் நல்வழி அடைந்து ஸ்ரீ அவதூதரவர்களின் கருணைக்குப் பாத்திரமானால் அதுவே ஆசிரியர்

களுக்கும் இதுபோன்ற புத்தகத்தை வெளியிட வேண்டுமென்று கருதிய இப்பதிப்பகத்தாருக்கும்பெரியகைம்மாறாகும், இதுபோன்ற தொடர்கள் வெளிவர ஏதுவாகும்.

ந. பிச்சமூர்த்தி